தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுரண்டையில் R.I. அலுவலகம் கட்டுவதற்கு அவர் அனுமதி கேட்பார் என்று சொன்னால், நிச்சயமாக நாங்கள் அதற்கு அனுமதி தருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

54—

மகளிர் சுய உதவிக் குழுக்கள்

***11229—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடனுதவியை விரைந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பை எனக்கு வழங்கியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மகளிர் சுய உதவிக் குழுக்கள் நேரடி வங்கிக் கடன் பெற குறைந்தபட்சம் மாதம் ஒரு முறை, ஆறு மாதங்கள் தவறாது குழுக் கூட்டங்களை நடத்தி, சேமிப்பு செய்து, உள்கடன் வழங்கி, குறித்த காலத்தில் உள்கடனைத் திரும்பச் செலுத்தி, கணக்குப் புத்தகங்களை முறைப்படி பராமரித்து செயல்பாட்டில் இருக்க வேண்டும். அவ்வாறு செயல்பாட்டில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒவ்வோராண்டும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, சுய உதவிக் கடன் விண்ணப்பத்தின் அடிப்படையில் உடனடியாக கடனுதவி அளிக்கப்பட்டு வருகிறது. அப்படிப் பெறப்பட்ட சுய உதவிக் கடன் விண்ணப்பங்கள் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில்

2023 மார்ச் 28]

முன்னெப்போதுமில்லாத வகையில் 15 நாட்களில் கடன் அனுமதி வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) 21 நாட்களில் சுய உதவிக் குழுக்களின் வங்கிக் கணக்கிற்கு கடன் தொகை செலுத்தப்படுகிறது. 21 நாட்களுக்குமேல் நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் குறித்து அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மாவட்ட வங்கியாளர்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு, விரைந்து கடனுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2022–2023 ஆம் நிதியாண்டில் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பாக, எங்களுக்கு வழங்கப்பட்ட இலக்கு 25,000 கோடி ரூபாய். ஆனால், நாங்கள் இலக்கைவிட அதிகமாக 25,022 கோடியே 19 இலட்சம் ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பாக அளித்துள்ளோம். இதன்மூலம் 4 இலட்சத்து 39 ஆயிரத்து 349 சுய உதவிக் குழுக்கள் பயனடைந்துள்ளன. இந்த ஆண்டு, 2023–2024 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு—சென்ற ஆண்டு ரூ.25,000 கோடி, இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதை உயர்த்தி, எங்களுக்கு இலக்கு 30,000 கோடி ரூபாயாக அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கண்டிப்பாக இந்த ஆண்டும் அந்த இலக்கைவிட அதிகமாக வங்கிக் கடன் இணைப்பை நாங்கள் வழங்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

தருமபுரி மாவட்டம் சார்பாக, அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்கள், பென்னாகரம் தொகுதியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்குவது குறித்து கேட்டிருக்கிறார்கள். தருமபுரி மாவட்டத்தில்தான், முதன்முதலில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் சுய உதவிக் குழு தொடங்கப்பட்டது. எனவே, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கக்கூடிய கடனை இந்த அரசு ஆகட்டும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆகட்டும், நாங்கள் கடனாகப் பார்க்கவில்லை; கடன் தொகையாகப் பார்க்கவில்லை; மகளிர் சுய உதவிக் குழுவில் பங்குபெற்றிருக்கக்கூடிய நம்முடைய சகோதரிகள் (மேசையைத் தட்டும் ஒலி), அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய, அவர்களுடைய உழைப்பின்மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை தொகையாகத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் இதைப் பார்த்திருக்கிறோம். எனவே,

கண்டிப்பாக இந்த அரசு விரைந்து இதைச் செய்து முடிக்கும். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல விளக்கத்தோடுகூடிய பதிலை வழங்கியிருக்கிறார்கள். குறிப்பாக, சமுதாயத்தில் சரிபாதிக்கு மேலே இருக்கக்கூடியவர்கள் பெண்கள். பெண்கள் முன்னேற்றம்தான், குடும்பத்தின் முன்னேற்றம் என்ற அடிப்படையில், இதற்கு முன்னால் மகளிர் சுய உதவிக் குழுக்கள் வாங்கிய கடன்களை, ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2,756 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்தது (மேசையைத் தட்டும் ஒலி) பெண்கள் மத்தியில் தமிழ்நாடு முழுவதும் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றது. அதைப்போலவே, நேற்று கூட நான் பேசிய நேரத்தில், தமிழ்நாடு முழுவதும் மகளிர் உரிமைத் தொகையை எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள், அதனை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்த நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு மகளிர் உரிமைத் தொகை (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கப்படும் என்ற மகத்தான அறிவிப்பைச் செய்தது குறித்து நேற்று இரவு முதல், இன்றுவரை தமிழ்நாடு முழுவதும் மக்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இது பெண்கள் மத்தியில் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குக் காரணம் என்னவென்றால், மகளிர் முன்னேற்றம்தான் குடும்பத்தினுடைய முன்னேற்றம்; மகளிர்தான் குடும்பத்திற்கு வெளிச்சம்; நாட்டிற்குக் கண்கள் என்ற காரணத்தின் அடிப்படையில்தான், "மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா!" என்றும், "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்றெல்லாம் சொன்னார்கள்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதுமே! கேள்விக்கு வாருங்கள்.*

2023 மார்ச் 28]

திரு. ஜி.கே. மணி: இதை உணர்த்த வேண்டும் என்பதற்காக பாடினார்கள். பெண்கள் முன்னேற வேண்டும் என்பதைக் கருத்திலே கொண்டுதான், பின்தங்கிய மாவட்டமாக இருக்கிற தருமபுரி மாவட்டத்தில் 1989 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுவை முதன்முதலாகத் தொடங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள் என்பது தற்போது தமிழ்நாடு முழுவதும் 4 இலட்சத்து 68 ஆயிரம் சுய உதவிக் குழுக்களாகவும், சுமார் 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்களை உறுப்பினர்களாகவும் கொண்டு விரிந்து பரவியிருக்கின்றன. இது மிகப் பெரிய சக்தியாக இருக்கிறது; மகாசக்திகளாகிய பெண்களெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பைப் பார்த்து பாராட்டுகிறார்கள்.

இங்கே வினா எழுப்புவதற்காக மட்டுமல்ல, நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழலில்தான், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 30,000 கோடி ரூபாய் கடன் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது; அது, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 5,000 கோடி ரூபாய் அதிகம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில், 15 நாட்களுக்குள் வழங்கப்படும் என்ற நல்ல அறிவிப்பை வெளியிட்டதற்கு நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்கி. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருக்கட்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். நீங்கள் கேட்டுவிட்டீர்கள்; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) சேர்த்து சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடு) சேர்த்து சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடு)

[2023 மார்ச் 28

இல்லை, நீங்கள் நன்றி சொல்லி அமர்ந்துவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்களின் துணைக் கேள்விக்குப் பதிலளிக்கும்போது, உங்களுக்கும் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்கள் கேட்ட கேள்விக்கு தெளிவாக, ஆழமான பதிலை நான் அளித்துவிட்டேன். அதைவிட ஆழமான நன்றியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது கேள்வி கேட்டால், நான் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மகளிர் சுய உதவிக் குழுக்கள் நாடெங்கும் பரவியிருக்கிற வேளையில், தருமபுரி மாவட்டம், எங்களுடைய பெண்ணாகரம் தொகுதி உள்ளிட்ட பல இடங்களில் பெண்கள் மாதத்திற்கு இரண்டு முறை, நான்கு முறை என கூட்டங்களை நடத்துகிறார்கள். அக்கூட்டங்களை, எங்கேயாவது தெருக்களிலும், சாலை ஓரங்களிலும் நடத்துகின்ற நிலையிருக்கின்ற காரணத்தால், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கட்டடங்கள் கட்டித் தரப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புவதோடு, இப்படி பொறுப்பேற்றிருக்கிற நல்ல அமைச்சர் அவர்கள், மேலும் உயர்வு பெற்று, நல்ல பணிகளை மேம்படுத்த வேண்டும் என்றும், (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய பணி மேலும் சிறக்க வேண்டும் என்றும் மீண்டும் ஒருமுறை வாழ்த்துகிறேன்.

2023 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள 12,116 கிராம ஊராட்சிகளில் 1,260 சதுர அடி பரப்பளவில் 3 அறைகள், அதாவது, ஒரு இ–சேவை மையம், ஒரு* storage room, *ஒரு கழிவறை வசதி கொண்ட கிராம ஊராட்சி சேவை மையக் கட்டடங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மேலும், 12,161 கிராம ஊராட்சிகளில் கூடுதலாக 350 சதுர அடி பரப்பளவில் பிரத்யேகமாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக, அவர்கள் பயன்படுத்துவதற்காக மட்டும் கட்டடங்கள் கட்டப்பட்டு, அவை பயன்பாட்டில் இருந்து வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்விரு வகைக் கட்டடங்களும் சுய உதவிக் குழுக்களுக்கு குழுக் கூட்டங்கள் நடத்துவதற்கு வழங்கப்பட்டுள்ளன; தேவையான இடங்களில் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

பெண்ணாகரம் தொகுதி அமைந்துள்ள தருமபுரி மாவட்டத்தில் மட்டும் 237 கிராம ஊராட்சி சேவை மையக் கட்டடங்களும், 239 சுய உதவிக் குழுக் கட்டடங்களும் பயன்பாட்டில் இருந்து வருகின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து நான் கள ஆய்வு செய்து, தேவையிருப்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.*

திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்கி, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், எங்களுடைய சின்னவர் அவர்களுடைய துறையிலே எனக்கு துணைக் கேள்வி கேட்பதற்கு அரிய வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 4–3–2023 அன்று கரூர் மாவட்டத்திற்கு வருகை தந்து*

மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுடைய ஏற்பாட்டில் நடைபெற்ற 30 ஆயிரம் பயனாளிகள் கலந்து கொண்ட மாபெரும் நலத் திட்ட நிகழ்ச்சியிலே 266 கோடி ரூபாய் மதிப்பிலான நலத் திட்டங்களை வழங்கினார்கள். அதுமட்டுமல்லாமல், 1,494 சுய உதவிக் குழுக்களுக்கு 40 கோடி ரூபாய் வங்கிக் கடன் உதவியை வழங்கினார்கள். அன்றையதினம் கரூர் தாந்தோனி பகுதியிலுள்ள பூமாலை வணிக வளாகத்தில் வருகை தந்த போது, மராமத்து பணிகள் நடைபெற்று கொண்டிருந்தன. அதனை விரைந்து முடிக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள். அந்தப் பணிகள் தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளன. எப்போது அந்த வணிக வளாகம் மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்கின்ற அந்தப் பொருட்களை நகர்ப்புறங்களில் சந்தைப்படுத்தி விற்பனை செய்ய ஏற்றவகையில், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 2000 ஆம் ஆண்டு மாவட்ட தலைமையகங்களில் வணிக வளாகங்களை நிறுவி, அதற்கு பூமாலை வணிக வளாகம் என்று பெயரிட்டார். 2021 ஆம் ஆண்டு கழக அரசு அமைந்த பின்பு, 29 மாவட்ட பூமாலை வணிக வளாகங்களில் புனரமைப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 6 கோடியே 16 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன. நான் எந்த மாவட்டத்திற்கு ஆய்வுக்குச் செல்கின்றபோதும், தொடர்ந்து பூமாலை வணிக வளாகத்திற்குச் சென்று, அதனை தொடர்ந்து ஆய்வு செய்து கொண்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள கரூர் மாவட்ட பூமாலை வளாகமும் இதில் அடங்கும். இவ்வணிக வளாகங்கள் அனைத்தும் ஒரே வண்ணம் பூசப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய திருக்கரங்களால் வருகின்ற மே மாதம் இறுதிக்குள் திறந்து வைக்கப்பட்டு, சுய உதவிக் குழுக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதை மாண்புமிகு*

2023 மார்ச் 28]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

55—

உயிரி உரங்களுக்கு மானியம் வழங்குதல்

***21217—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதி, தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உயிரி உரங்கள் மற்றும் நுண்ணூட்டச்சத்து கலவை உரங்களுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இரசாயன உரங்கள் தவிர்த்து, இதர இடுபொருட்களான உயிரி உரங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்து கலவை உரங்களுக்கு, ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் மூலமாக மானியம் ஏதும் வழங்கப்படுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள்.*

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

'உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
தொழுதுஉண்டு பின்செல் பவர்.'

என்ற திருவள்ளுவரின் கூற்றுக்கேற்ப நானும் ஒரு விவசாயி என்கின்ற வகையில், உயிரி உரங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்து கலவை உரங்கள் அதிகரிக்கும்போது, மண் வளம், இயற்கை வளம், மனித சுகாதாரம் பாதுகாக்கப்படும். ஆகவே, மானியம் கூடுதலாக வழங்கவும், விவசாயிகளுக்கு உயிரி உரங்கள்